# அன்னை தினம்
## (அன்னை இனம் உன்றுதினம்)

தாய்குலத்தின் பெருமையை உலகோர்க்கு நன்கு உணர்த்த
அன்னை இனம் உன்றுதினம் என ஒரு தினத்தைக் கொண்டாட
ஒதுக்கிய நாளில், அன்னை பொன்னி மனத்தில் எண்ணிமிடுகிறாள்.
தான் பெண்ணாகப் பிறந்தாலும், பெண்ணாக வளர்ந்ததுவும்
பெண்ணாகப் புரக்குவதும் - அனைத்தும் இனிதாக வாய்த்ததை
எண்ணி இறுமாப்பு கொள்கிறாள்.

பாட்டு, பொன்னியின் வாய்மொழி.

1

அன்னை இனம் தருக்குமாறு, மாண்புகூறி வாழ்த்துதற்கு
உன்றுகின்றார் உலகத்தோர் விழாஇன்று வீறுகொள்ள -
பொன்னிநானும் புகழ்கேட்டுப் பொலியநேர்ந்த பேறுஎன்னே!

2

"மகன்கள்ஐந்து வளமுற ஈந்த ஈச!
மகளும் ஈன மனைதவிழ்ந்து சோதி வீச."
பராவிஇங்கன் பலதிங்கள் நோற்றபின்பே
அருளினானாம் பொன்னிஎன்னை பறத்த இன்பே.

பெண்ணாய்நான் பிறந்துள்ள
புண்ணியத்தால் செருக்குகின்றேன்.
தொழுகின்றேன்.
இறைவனாரின் கருணையாலே
நிறைந்தவிதம் மறக்கொணுமோ?

3

வெள்ளிசெவ்வாய் நெய்யாட்டி மஞ்சட் பூச்சு!
ஒள்ளியபல் அணிகலனால் மேனி வீச்சு!
பாவாடை மேலாக்கு சிறுமி நாளில் -
பூவிட்ட நெடுங்கூந்தற் பின்னல் தோளில்.

பெண்ணாய்நான் வளர்ந்துஅலர்ந்த
வண்ணத்தால் உருகுகின்றேன்.
வாழ்த்துகின்றேன்.
பற்றுளமாய்ப் பேணியஎன்
பெற்றோரை மறக்கொணுமோ?

4

மடிஎனதில் கிடந்துறங்கி நாட சார்பு
கொடுக்கலானேன் பரதனுக்கு சுரந்த மார்பு.
தொனித்து எந்நாள் ***அம்மா எனும்*** மழலை மாற்றம்
சனித்தது அன்றே வாழ்வில்என் பதவி ஏற்றம்.

பெண்ணாய்நான் பரக்குகின்ற
கண்ணியத்தால் தருக்குகின்றேன்.
தழுவுகின்றேன்.
உடம்புஎனதை அழகுசெய்யும்
குடிக்கொழுந்தை மறக்கொணுமோ?

5

ஆம்,

பரமனானாலும் மாதா ஆனேன்,
குரவராலும் அன்னை ஆனேன்
பரதனாலும் அம்மா ஆனேன்?

மெய்யே

எனைமணந்த கேள்வரன்றோ செய்தார்தாய் என்னை?
இனிக்கின்றதாம் ***அப்பாபேர்*** ஆகலால்நான் அன்னை.
"மனிதர்ஏறு பரதன்" என புவியில்ஓங்க பின்னை
புனிதவேர்கள் மண்ணில்ஊன்றி நிகர்க்கணும்நான் தென்னை.

*********